செ.வெ.எண்: 55 நாள்:30.07.2021

**நாகப்பட்டினம் மாவட்ட கடலோர பகுதிகளில் கடலில் செயற்கை பவளப்பாறைகள் இறக்கும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்ட கடலோர பகுதிகளில் கடலில் செயற்கை பவளப்பாறைகள் இறக்கும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.07.2021) தொடங்கி வைத்தார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் 9 இடங்களில் செயற்கை பவளப்பாறை 1530 நம்பர்ஸ் இன்று முதல் கட்டமாக தொடங்கப்பட்டது. சுமார் 9 மீனவ கிராமங்களான நாகப்பட்டினம், கல்லார், வானவன் மகாதேவி, வெள்ளப்பள்ளம், வேட்டைக்காரணிருப்பு, விழுந்தமாவடி, திருப்பூண்டி, செருதூர், வேளாங்கண்ணி, பொய்யூர் ஆகிய இடங்களில் சுமார் 3 கோடி மதிப்பீட்டில் தொடங்கி தற்போது நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் நாகப்பட்டினத்தில் இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். செயற்கை பவளப்பாறை வட்ட வடிவம், முக்கோண வடிவம், மற்றும் குழு வடிவத்தில் கான்கிரீட் மூலம் தயாரித்து அதை கடலில் இறக்குவதன் மூலம் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் மீன்வளம் அதிகரித்து மீனவர்களுக்கு பயனள்ளதாக அமையும்.

இந்நிகழ்ச்சியில் கீழ்வேளுர் சட்டமன்ற உறுப்பினர் திரு.நாகை வி.பி.மாலி, துறைமுக திட்ட கோட்ட செயற்பொறியாளர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, உபகோட்ட உதவி செயற் பொறியாளர் திரு.எம்.ஜி.இராஜேந்திரன், மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் திரு.ஜெயராஜ், உதவி பொறியாளர்கள் திரு.செ.செந்தில்ராஜ், திரு.பெ.கொளஞ்சிநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**